**ARTICLE 39 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00083**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 74–79
Received: 3 October 2026 • Accepted: 3 October 2026

# திருமலையாண்டவர் குறவஞ்சியில் பண்பாட்டுப் பதிவுகள்

**ராதாகிருஷ்ணன் மு[1,*], முனைவர்.அருள்மனோகரி பா[2]**

[1]முனைவர் பட்ட பகுதி நேர ஆய்வாளர் பதிவு எண் : 2512124011003 தமிழ்த்துறை - ஆய்வு மையம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம். (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரி), India

[2]உதவிப்பேராசிரியர் - தமிழ்த்துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி, சங்கரன்கோவில் - 627 756., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** ராதாகிருஷ்ணன் மு — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கியங்கள் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. அவற்றுள் குறவஞ்சி இலக்கியம், இலக்கியச் சுவையுடன் அக்கால மக்களின் வாழ்வியல், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், கலைகள், தொழில்கள், சமூக உறவுகள் மற்றும் பண்பாட்டு மரபுகளைப் பதிவு செய்யும் சிறப்புடையதாக விளங்குகிறது. இவ்வகையில் "திருமலையாண்டவர் குறவஞ்சியில் பண்பாட்டுப் பதிவுகள்" என்னும் இவ்வாய்வு கட்டுரை திருமலையாண்டவர் குறவஞ்சியில் காணப்படும் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை அடையாளம் கண்டு ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நூலில் இடம்பெறும் இறை நம்பிக்கை, கோயில் வழிபாடு, திருவிழா மரபுகள், போன்ற சமயப் பண்பாட்டுக் கூறுகள் முதன்மையாக ஆராயப்படுகின்றன. மேலும் குறவர் சமூகத்தின் வாழ்க்கைமுறை, குறிசொல்லும் மரபு, நாட்டுப்புற நம்பிக்கைகள், குடும்ப உறவுகள், சமூக உறவுகள், தொழில் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவையும் ஆராயப்படுகின்றன.

**Keywords / திறவுச் சொற்கள்:** மலைவளமும் இயற்கைப் பண்பாடும் - வேடர் மற்றும் குறவர் வாழ்க்கை - குறிசொல்லுதல் - ஆடை அணிகலன் - இசை மற்றும் நாட்டுப்புறக்கலை - சமயம் - திருமண முறை - முருக வழிபாடு - திருவிழா மற்றும் ஊர்வலம் - மயில் வாகனம் - இசை முழக்கம் மற்றும் மங்கல நிகழ்வு - குடைகள் மற்றும் யானை ஊர்வலம்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** மு, ரா., & பா, மு. (2026). திருமலையாண்டவர் குறவஞ்சியில் பண்பாட்டுப் பதிவுகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## முன்னுரை

திருமலையாண்டவர் குறவஞ்சி தென்காசி அருகே உள்ள பண்பொழி திருமலையில் எழுந்தருளியுள்ள முருகன் மீது பாடப்பெற்றது. தென் மாவட்டப் பண்பாட்டு வாழ்வின் பல்வேறு பரிமாணங்களைப் பதிவு செய்யும் முக்கியமான குறவஞ்சி இலக்கியமாகும். திருமலை நிலப்பரப்பு, முருக வழிபாடு, கோயில் திருவிழா, குறவர் வாழ்வியல், குறிசொல்லும் மரபு, இயற்கை வளம், நாட்டுப்புறக் கலை, காதல் மற்றும் சமூக உறவுகள் ஆகியவை இந்நூலில் ஒன்றோடொன்று இணைந்து வெளிப்படுகின்றன. எனவே, இந்நூல் இலக்கியச் சிறப்புடன் தென்மாவட்ட மக்களின் பண்பாட்டு வரலாற்றை அறிய உதவும் முக்கிய ஆவணமாகக் கருதப்படுகிறது.

## மலைவளமும் இயற்கைப் பண்பாடும்

திருமலையாண்டவர் குறவஞ்சியில் மலைவளம் இயற்கைச் சூழலில் முக்கியக் கூறாகவும், மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த பண்பாட்டுப் பதிவாகவும் அமைகிறது. மலைப்பகுதியில் தோன்றும் அருவிகள், சுனைகள், ஓடைகள் ஆகியன மக்களின் நீராதாரமாக விளங்குகின்றன. மலை மற்றும் காடுகளைச் சார்ந்து வாழும் விலங்குகள், பறவைகள் போன்றவை இயற்கைச் சூழலின் பன்முகத்தன்மையை உணர்த்துகின்றன. மலைவாழ் மக்களின் தொழில், உணவு, வேட்டையாடுதல், தேன் சேகரித்தல் போன்ற வாழ்வியல் நடவடிக்கைகள் மலைவளத்துடன் வெளிப்படுத்துகின்றன.

> “கோங்கமெனுங் கன்னிமுலைக் கொங்குமுகி ழரும்பக்
> கொழுநனெனும் வேங்கைமலர்ப் பொன்சொரிந்து விரும்பப்
> பாங்குசெம்பொன் வாங்குகைபோற் காந்தண்முகிழ் விரியப்”
> தி.ஆ.கு – பாடல் - 46:1 (1-3)

இப்பாடலில் திருமலைப் பகுதியின் இயற்கை வளம் அழகாக வருணிக்கப்படுகிறது. கோங்கு, வேங்கை, மூங்கில், தேன், மலர்கள், வண்டுகள் போன்ற இயற்கைக் கூறுகள் குறிப்பிடப்படுகின்றன.

> “தேங்கமழு மலர்ப்பணைகள் தாங்குபொழி லோங்கும்
> செங்குவளைத் திருமலைதா னெங்கண்மலை யம்மே”
> தி.ஆ.கு – பாடல் - 46:1 (7-8)

திருமலை அடந்த சோலைகள் நிறைந்த பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. குவளை, செங்குவளை, காந்தள், வேங்கை போன்ற மலர்களின் மணமும் மலர்ச்சியும் திருமலையின் இயற்கைச் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன.

## வேடர் மற்றும் குறவர் வாழ்க்கை

வேடர் மற்றும் குறவர் மக்களின் வாழ்க்கை மலை மற்றும் காடு சார்ந்த இயற்கை சூழலோடு இணைந்த வாழ்வியலாகும். வேட்டையாடுதல் முக்கிய தொழில் சாரந்த செயல்பாடாகக் கருதப்படுகிறது. வேட்டையுடன் மட்டுமல்லாமல் தேன், கிழங்கு, கனி போன்ற காட்டு வளங்களைச் சேகரித்தல் போன்ற செயல்பாடுகளும் மலை சார்ந்த வாழ்வியலைக் காட்டுகின்றன.

> “ஆனைமருப் பென்னும்வெள்ளி வேலிபுடை துதைப்பார்
> அதனடுவில் வேடர்பொன்போற் செந்தினையை விதைப்பார்”
> தி.ஆ.கு – பாடல் - 46:5 (1-2)

வேடர்கள் வாழ்ந்த மலைப்பகுதி, அவர்கள் மேற்கொண்ட தொழில்கள் மற்றும் தினை போன்ற பயிர்கள் பற்றிய செய்திகள் இவ்வடிகளில் காணப்படுகின்றன. இதன் மூலம் வேட்டையாடுதல், வேளாண்மை, மலைவாழ்வியல் ஆகியவை குறவர் சமூகத்தின் வாழ்க்கையோடு இணைந்திருந்ததை அறிய முடிகிறது.

## குறி சொல்லுதல்

குறி சொல்லுதல் என்பது குறவர் சமூகத்தின் முக்கியமான பண்பாட்டுக் கூறாகும். குறத்தி தன்னுடைய இயற்கை அறிவு, அனுபவம் மற்றும் மரபுவழி நம்பிக்கைகளின் அடிப்படையில் ஒருவரின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை நன்கு அறிந்து கனித்துக் கூறினர்.

“மாதர்க ணினைத்த மனக்குறி மூன்று
போதினும் வருங்குறி போங்குறி மெய்க்குறி
பாந்தமாய் வகையாய்ப் பகர்ந்திடுங் குறியே
திறத்துடன் சொல்லுங் குறத்திவந் தனளே”
தி.ஆ.கு – பாடல் - 41 (35-40)

குறத்தி மக்களின் மனக்குறிகளை அறிந்து குறி கூறும் மரபைக் கொண்டவளாகச் சித்தரிக்கப்படுகிறாள். இதன் மூலம் அக்கால மக்களிடையே நிலவிய குறிசொல்லுதல் மற்றும் எதிர்கால நம்பிக்கை போன்ற பண்பாட்டு கூறுகளை அறிய முடிகிறது. குறத்தி தன் மலைநாடு, இயற்கை வளம், மக்கள் வாழ்க்கை, தன் சமூகத்தின் பெருமை ஆகியவற்றை எடுத்துரைப்பது குறவர் பண்பாட்டின் தனித்துவத்தை வெளிப்படுத்துகிறது.

## ஆடை - அணிகலன்

குறவர் மக்களின் ஆடை அணியும் முறை அவர்களின் மலைவாழ் வாழ்க்கை மற்றும் தொழில் சார்ந்த சூழலுக்கு ஏற்றதாக அமைந்திருந்தது. எளிமையான ஆடைகளுடன் இயற்கை சூழலுக்கு ஏற்ற வாழ்வியலை வெளிப்படுத்தினர். பெண்கள் அழகை வெளிப்படுத்தும் வகையில் காதணி, கழுத்தணி, வளையல், காலில் அணியும் அணிகலன்கள் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

“செங்கை யணிவளை முழங்கவே
அங்க மிலகிய சிங்க நிகரிடை
அங்க ணணிதுகில் துலங்கவே”
தி.ஆ.கு – பாடல் - 42 (12-16)

வளையல், ஆடை, கூந்தல் அலங்காரம் போன்றவற்றின் மூலம் பெண்களின் அழகியல் மற்றும் அணிகலன் பண்பாடு வெளிப்படுகிறது. அக்காலத்தில் பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்வதில் கொண்டிருந்த ஆர்வத்தையும் இப்பாடல் காட்டுகிறது.

## இசை மற்றும் நாட்டுப்புறக் கலை

குறத்தி தன் நாட்டின் வளம், மலைப்பகுதியின் சிறப்பு, இயற்கைக் காட்சிகள், தன் சமூகத்தின் பெருமை ஆகியவற்றைப் பாடலாக எடுத்துரைப்பது குறவர் சமூகத்தின் வாய்மொழி மற்றும் பாடல் மரபை வெளிப்படுத்துகிறது. குறி சொல்லுதல், குறத்தி உரையாடல், பாடல், ஆடல் போன்றவை இணைந்து நாட்டுப்புற நாடகத்தன்மையை உருவாக்கின.

“தேனுலவு மஞ்சரியிற் சஞ்சரிகம் பாடும்
செங்குவளைத் திருமலைதா னெங்கண்மலை யம்மே”
தி.ஆ.கு – பாடல் - 46:5 (7-8)

இயற்கையின் ஒலிகளுடன் இசை உணர்வும் இணைக்கப்பட்டிருந்தது. குறவஞ்சி இலக்கியத்தின் பாடல், இசை, நடனம் ஆகியவை நாட்டுப்புறக் கலை மரபுகளின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது. இவற்றின் மூலம் மக்களின் பொழுதுபோக்கு, நம்பிக்கை, சமூக உறவு மற்றும் கலை உணர்வு வெளிப்படுகின்றன.

## சமயம்

திருமலையாண்டவர் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் பக்தியும் இந்நூலின் அடிப்படைச் சமயக் கூறுகளில் ஒன்றாக அமைகிறது.

கோயில்கள் வழிபாட்டுத் தலமாக மட்டுமின்றி மக்களின் சமூக மற்றும் பண்பாட்டு மையமாகவும் விளங்கின. இறைவனைத் தரிசித்தல், வழிபாடு செய்தல் போன்ற மரபுகள் மக்களின் அன்றாட சமய வாழ்க்கையை எடுத்துக்காட்டுகின்றது.

“பண்டு தான்சிவ பூசனை செய்யும்
பான்மை யென்னப் பருப்பதஞ் சார்ந்து
மண்ட லீசுரர் கொண்டாட வானம்
வழங்கு வாரிவட வாரிய நாடே”
தி.ஆ.கு – பாடல் - 48:1 (5-8)

சிவ வழிபாடு மற்றும் தெய்வ நம்பிக்கை போன்றவை மக்களின் வாழ்க்கையோடு நெருக்கமாக இருந்ததை இவ்வடி காட்டுகிறது. எனவே சமய வழிபாடு அக்காலப் பண்பாட்டின் முக்கிய அங்கமாக இருந்துள்ளது. இறைவனை நாடுதல், இறையருளை எதிர்பார்த்தல் போன்ற பக்தி உணர்வுகள் வெளிப்படுகின்றன.

## திருமண முறை

தலைவன் தலைவியின் காதல் திருமணத்தை நோக்கிய உறவாகக் கருதப்படுகிறது. தலைவியின் காதல், எதிர்பார்ப்பு, ஏக்கம் போன்ற உணர்வுகள் திருமணப் பண்பாட்டின் உளவியல் கூறுகளை வெளிப்படுத்துகின்றன.

“விரவிமுகின் முழவதிர மதுதாரை வார்க்க
வேட்டமண வாளனென மென்றளிர்க்கை யேந்தித்
திரமுறவே தினந்தோருங் கலியாணஞ் சிறக்கும்”
தி.ஆ.கு – பாடல் - 46:6 (5-7)

திருமணம் தனிமனிதர்களின் உறவாக மட்டுமல்லாமல் குடும்பம் மற்றும் சமூகத்துடன் தொடர்புடைய நிகழ்வாகவும் கருதப்பட்டன. உறவினர்கள், சமூக ஒப்புதல், குடும்ப உறவுகள் போன்றவை திருமண வாழ்வின் முக்கியக் கூறுகளாகக் கொண்டிருந்தனர். இசைக்கருவிகள், கொண்டாட்டம் போன்றவை பற்றிய செய்திகள் இப்பகுதியில் இடம்பெறுகின்றன. இதன்மூலம் திருமண விழா சார்ந்த சமூக மற்றும் கலைப் பண்பாடுகளை அறிய முடிகிறது.

## முருக வழிபாடு

திருமலையாண்டவர் குறவஞ்சியில் முருகன் வழிபாடு மிகவும் முக்கியமான சமயப் பண்பாடாகும். திருமலைப் பகுதியில் எழுந்தருளியுள்ள முருகனே இப்பாடலில் மையத் தெய்வமாகக் குறிப்பிடப்படுகிறார்.

“சீர்தங்கு பண்பை யூர்வாழ் திருமலை முருகன்”
தி.ஆ.கு – பாடல் - 1:1 (1-2)

என்ற அடிகள் மூலம் திருமலை முருகன் ஊரின் முதன்மைத் தெய்வமாகவும், மக்களின் வழிபாட்டிற்குரிய இறைவனாகவும் கருதினர்.

திருவிழா மற்றும் ஊர்வலம்

திருவிழா மற்றும் ஊர்வலம் கோயிலை மையமாகக் கொண்ட சமயப் பண்பாட்டின் முக்கியக் கூறாகும். திருமலைக் குமரன் மயில் வாகனத்தில் எழுந்தருளி, இசை முழக்கங்களுடனும், தேவர்களுடனும், சேனைகளுடனும் திருவுலா வருவது சிறப்பாக வருணிக்கப்படுகிறது.

“தேவர்கண முடுக்கணம்போற் சேனை சூழத்

திருவுலாப் பவனிவந்து சிறக்கின்றானே”
தி.ஆ.கு – பாடல் - 9 (7-8)

இறைவன் கோயிலுக்குள் மட்டுமின்றி மக்கள் காணும் வகையில் வீதியுலா வருவது திருவிழாப் பண்பாட்டின் முக்கிய நிகழ்வாக அறியப்படுகிறது.

## மயில் வாகனம்

திருமலைக் குமரன் மயிலில் பவனி வருதல் போன்ற காட்சிகள் முருக வழிபாட்டின் சிறப்பையும் கோயில் சார்ந்த திருவிழாப் பண்பாட்டையும் காட்டுகின்றன.

“மயிலின் வந்தனனே
திருமலைக்குமரன்
மயில் வந்தனனே”
தி.ஆ.கு – பாடல் - 10 (1-2)

முருகனின் மயில் வாகனம் ஊர்வலத்தின் முக்கிய அடையாளமாக விளங்குகிறது.

இசை முழக்கம் மற்றும் மங்கல நிகழ்வு

ஊர்வலத்தின் போது பல்வேறு இசைக்கருவிகள் முழங்கியதாக நூல் குறிப்பிடுகிறது.

“மத்தள மந்தவில் பேரிசல்லரி
மங்கலத்தொலி தழங்கவே”
தி.ஆ.கு – பாடல் - 10:1 (7-8)

கோயில் திருவிழா, பவனி, இசை, மக்கள் கூடுதல் போன்ற நிகழ்வுகளில் மத்தளம், பேரி, சல்லரி போன்றவை பயன்படுத்தியமையும், மக்கள் ஒன்றிணைந்து கொண்டாடிய ஊர்சார் திருவிழாப் பண்பாட்டையும் வெளிப்படுத்துகிறது.

## குடைகள் மற்றும் யானை ஊர்வலம்

திருமலையாண்டவரின் திருவிழா மற்றும் ஊர்வலக் காட்சிகள் சிறப்பாக சித்தரிக்கப்பட்டுள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டு காலங்களில் திருவிழா ஊர்வலத்தில் யானை மற்றும் வண்ணமயமான அலங்காரக் குடைகள் பிடித்துச் செல்லப்படுவது விழாவின் சிறப்பையும் இறைவனுக்குச் செலுத்தப்படும் மரியாதையையும் வெளிப்படுத்துகிறது.

பவளமொய்த்தவெண் முத்துக்குடைகளும்
பாங்கரெங்கணும் பிடிக்கவே
கவளயானையின் வாசியின்னொலிகளாய்க்
ககனவண்டமும் வெடிக்கவே”
தி.ஆ.கு – பாடல் - 10:2 (1-4)

முத்துக்குடைகள், யானைகள் மற்றும் தேவர் குழுக்களுடன் நடைபெறும் திருவுலா ஆகியவை அக்காலத் திருவிழாவின் சிறப்பையும் மக்கள் பங்கேற்பையும் உணர்த்துகின்றது.

## முடிவுரை

திருமலை ஆண்டவர் குறவஞ்சி வெறும் சமய இலக்கியமாக மட்டும் நிற்காமல், தென் மாவட்ட தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, மொழி வளம், இயற்கை போற்றுதல் மற்றும் தெய்வ வழிபாடு ஆகிய பண்பாட்டு அம்சங்களை நமக்கு எடுத்துரைக்கும் சிறந்த பண்பாட்டுப் பேழை ஆகும்.

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

செவ்விலக்கியச் செறிவும் எளிய மக்கள் மொழியும் இணைந்த இந்நூல் தமிழ்ப் பண்பாட்டின் உயரிய சான்றாகத் திகழ்கிறது.

## துணைநூற் பட்டியல் (References)


1. திருமலையாண்டவர் குறவஞ்சி, கலைமகள் வெளியீடு, சென்னை லா ஜர்னல் அச்சுக்கூடம், மயிலாப்பூர் (1938)
2. பதிப்பாசிரியர் - டாக்டர். உ.வே.சாமிநாதையர்


© 2026 ராதாகிருஷ்ணன் மு, முனைவர்.அருள்மனோகரி பா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..